பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 18 செவ்வாய்க்கிழமை 03.08.2021 கதிர் 137

## யாழில் ஐந்து நாள்களில் ஒரு லட்சம் தடுப்பூசிகள்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் நேற்று திங்கட்கிழமை வரையிலான ஐந்து நாள்களில் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 376 பேர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

☞2

## சிறுமி ஹிஷாலினி தங்கியிருந்த அறையில் சிக்கிய முக்கிய சாட்சி

### விசாரணை தீவிரம் என்கிறது பொலிஸ்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் சிறுமி ஹிஷாலினி தங்கியிருந்த அறையின் சுவரில் தமிழில் அர்த்தப்படும் வகையில் எழுதப்பட்ட ஆங்கில மொழி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த அறையை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவற்றில் தமிழ் மொழியில் அர்த்தங்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் ஆங்கில

☞2

## வாளால் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய 13 பேர் மறியலில்!

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்று வாளி னால் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய 13 இளைஞர்களை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

தென்மராட்சி, கொடிகாமம்பகுதியைச்சேர்ந்த இளைஞர்களே அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கொடிகாமத்தில் இருந்து குறித்த இளைஞர்

☞2

# சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு இல்லை தொடர்கின்றது ஆசிரியர் போராட்டம்

### இன்று 23ஆவது நாளாகவும் இணையவழிக் கற்பித்தல் புறக்கணிப்பு



**அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவையில் நேற்று அனுமதி வழங்கப்படவில்லை.**

**இதனால் இணையவழிக் கற்பித்தல் செயற்பாடுகளில் இருந்து விலகி, முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.**

☞2

## ஒன்றரை இலட்சம் ரூபா பணத்துடனும் ஹெரோயினுடனும் இருவர் மாட்டினர்!

யாழ்ப்பாணத்தில் 12 கிராம் ஹெரோயின்போதைப்பொருளுடனும், ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா பணத்துடனும் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

☞2

## சீனாவின் 'சினோபோர்ம்' தடுப்பூசிகளைப் பெற்று வெளிநாடு செல்லக் காத்திருப்போர் நிர்க்கதியில்

### மாற்று நடவடிக்கை குறித்து சிந்திக்கின்றது அரசு

சீனாவின் தயாரிப்பான 'சினோபோர்ம்' தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு வெளிநாடு செல்லக் காத்திருப்போர், மீண்டும் வெளிநாடு சென்று மேலும் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டு, வெளிநாடு சென்று மேலும் இரண்டு தடுப்பூசிகளைப்

☞2

## பால்மாவுக்குத் தட்டுப்பாடு இல்லை

### அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

சந்தையில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு எதுவும் இல்லை என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அங்காடிகளில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது எனவும், போதுமானளவு பால்மா இருக்கின்றது எனவும் அவர் கூறினார்.

சந்தையில் பால்மாவுக்குத்

☞2

## மேலும் 40 லட்சம் 'சினோபோர்ம்' இலங்கைக்கு!

அடுத்த வாரம் மேலும் 40 லட்சம் 'சினோபோர்ம்' தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கப்பெறவுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இம்மாதம் இரண்டாம் வாரமளவில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும்

☞2

## காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை

☞2

## கொரோனா நோயாளி தப்பியோட்டம்

கம்பளை ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த தொற்றாளர் ஒருவர் இன்று காலை தப்பியோடியுள்ளார்.

72 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு தப்பியோடியுள்ளார் எனவும், அவர் பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

☞2

## ஒன்றரை இலட்சம் ரூபா பணத்துடனும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த இருவரும் போதைப்பொருள் மற்றும் பணத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும், போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்கள் எனவும், போதைப்பொருள் விற்பனை ஊடாக பெறப்பட்ட பணத்துடனையே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும்பொலிஸ்தரப்புதெரிவிக்கின்றது.

இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சீனாவின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதில் சிரமம் இருக்கின்றது என வெளிநாடு செல்லக் காத்திருப்போர் கருதுகின்றனர்.

இது குறித்து இன்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ரமேஷ் பத்திரண,

சுமார் 25 நாடுகள் ஒரு சில தடுப்பூசிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கியுள்ளன. எனவே, அந்தந்த நாடுகள் அங்கீகரிக்கும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுப்பது குறித்து வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம். ஆனால், வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பில் இருந்து 'சினோபோர்ம்' தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் குறித்தே சிக்கல் எழுந்துள்ளது.

ஆனால், தடுப்பூசி பெறாது வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பில் உள்ளவர்கள், செல்லும் நாட்டில் எந்தத் தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அதேதடுப்பூசியை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

## மேலும் 40 லட்சம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பூசியைச் செலுத்தி முடிக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

அதன் பின்னர் 18 வயது முதல் 30 வயதுடையவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

12 வயது முதல் 18 வயதுவரையான மாணவர்களுக்குத் தடுப்பூசி வழங்குமாறு கல்வி அமைச்சு கோரிக்கை முன்வைத்துள்ளது. மாணவர்களுக்கு எந்தத் தடுப்பூசி சிறந்தது என ஆராய்ந்து பரிந்துரையை முன்வைக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொரோனா நோயாளி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் தொற்று உறுதியான குறித்த நபர் சிகிச்சைக்கு செல்லாமல் தலைமறைவானநிலையிலேயேஇருந்துள்ளார். எனினும், அவரை அதிகாரிகள் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டுவந்தனர்.

இந்நிலையிலேயே இன்று காலை தப்பியோடி, கம்பளை - தொழுவ, குறுகல பகுதியில் உள்ள வீட்டில் இருந்துள்ளார். அவரை மீண்டும் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓட்டோஒன்றிலேயே அவர் சென்றுள்ளார்.

## சிறுமி ஹிஷாலினி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்துகள் இருந்துள்ளன.

இதில் 'என் சாவுக்கு காரணம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த எழுத்துக்கள் இரசாயனப் பகுப்பாய்வு நிபுணர்களால் பரிசோதிக்கப்படுகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் இதுவரையில் 40 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

## பால்மாவுக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தட்டுப்பாடு இருக்கின்றது எனப் பொதுமக்கள் மத்தியில் பரவி வரும் செய்திகள் குறித்து கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பால்மாவுக்குத் தட்டுப்பாடு இருக்கின்றது என அரசுக்குத் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அரசு உள்நாட்டுப் பால் உற்பத்தியை அதிகரிப்பதிலும் அதீத கவனம் செலுத்தியுள்ளது எனவும் அமைச்சர் ரமேஷ் பத்திரண மேலும் தெரிவித்தார்.

## வாளால் கேக் வெட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு 6 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சி முழங்காவில் பகுதிக்குச் சென்று அங்கு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் தகவல் அறிந்த முழங்காவில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, சுமார் ஐந்தடி நீளமான கேக் ஒன்று, அதனை வெட்டப் பயன்படுத்தப்பட்ட வாள் என்பன பொலிஸாரினால் மீட்கப்பட்டன. அத்துடன் பின்புறத்தில் கறுப்புத் துணியில் 001 எனவும், கெமி எனவும் எழுதப்பட்டு கட்டப்பட்டு இருந்தன.

யாழில் இயங்கும் ஆவா குழு , 001 எனும் குறியீட்டு இலக்கத்தைப் பயன்படுத்துவது வழமை என்பதால் , சந்தேகம் கொண்ட பொலிஸார் அங்கிருந்த 13 இளைஞர்களையும் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் அவர்களை முற்படுத்தினர். அதையடுத்து நீதிமன்றம் அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

## காளாஞ்சி கையளிக்கும் .....







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சம்பளப் பிரச்சினைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவது தொடர்பாக கல்வி அமைச்சரால் அண்மையில் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தவிடயத்தில்தீர்வுபெற்றுக்கொடுப்பதற்காக அமைச்சரின் தலைமையில் கடந்த 27ஆம் திகதி அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பங்குபற்றுதலுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

எனினும், இந்தக் கலந்துரையாடல் இறுதித் தீர்மானம் எட்டப்படாமல் நிறைவடைந்திருந்தது.

இதற்கமைய அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுத்துள்ள இணையவழிக் கற்பித்தல் புறக்கணிப்புப் போராட்டம் இன்று 23 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

## யாழில் ஐந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொரோனாத் தடுப்பூசியின் ஒரு டோஸையாவது பெற்றுள்ளனர் எனவும், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இரண்டுடோஸ்களையும்பெற்றுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்கனவே முதல் இரண்டு கட்டங்களிலும் ஒரு லட்சம் பேருக்கு முதலாவது தடவை தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 50 ஆயிரம் பேர் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர்.

தற்போது மூன்றாம் கட்டமாக இரண்டு லட்சம் பேருக்கு முதலாவது தடவையாக தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று ஐந்தாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ரீதியாக30வயதுக்குமேற்பட்டவர்களுக்கும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

நேற்று ஐந்தாவது நாளில் 14 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் மற்றும் வைத்தியசாலைகளில்என 22 ஆயிரத்து 34 பேர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் - என்றார்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மறுக்கப்படும் கல்வி

கொரோனா தொற்றுப் பேரிடர், அதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், வாழ்வியல் பிரச்சினைகள் உட்பட இன்னோரன்ன சிக்கல்களுக்கு மத்தியில் கல்வித் துறை சீரழிவு பெரும் பூதாகரமாக வடிவம் எடுத்திருக்கிறது.

தொற்றுப் பேரிடர் நெருக்கடி காரணமாக கடந்த ஒன்றரை வருடங்களாக நாட்டின் கல்வித் துறையே படுத்துவிட்டது. பாடசாலைகள் இயங்கவில்லை. மாற்று வழி முறைகளில் கல்வித்துறையை வழமைக்குக் கொண்டுவரும் முயற்சிகள் முற்றுமுழுதாகத் தோற்று விட்டன என்பது அம்பலமாகியுள்ளது.

நிலைமை இன்னும் மோசம் அடைவதால் கல்வித்துறை இயன்ற விரைவில் வழமைக்குத் திரும்பும் என்ற நம்பிக்கை அடியோடு குறைந்து வருகின்றது.

இந்த நிலைமை இப்படியே நீடிக்குமானால் ஒரு தலைமுறைக்கான இளமைக்கால கல்வியே முழுமையாக பாதிப்புறும் ஆபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

கொரோனா வைரஸ் பரவும் ஆபத்துக் காரணமாக பாடசாலைகளில் மாணவர்களை ஒன்று கூட்டி கல்வியைத் தொடர முடியாத நெருக்கடி நிலை நீடிக்கின்றது.

மாற்று வழிமுறையாகத் தொலைதூரக் கல்வி, இணைய வழிக் கல்வி என்றெல்லாம் அதிகம் பேசப்பட்டது. எல்லாம் பேச்சளவிலேயே தவிர அவை தொடர்பில் உருப்படியான திட்டங்கள் எவையுமே உருப்படியாக முன்னெடுக்கப்படவில்லை என்பது வெளிப்படையான உண்மை. தொலைதூரக் கல்விக்கும், இணையவழிக் கல்விக்குமான செயலிகளை உருவாக்க முயற்சிகள், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஆரவார அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டன. ஆனால் அவை எவையும் நடைமுறையில் சாத்தியமானவையாக தெரியவுமில்லை; வெளிப்படையாகக் காட்டப்படவுமில்லை.

மாற்றுக் கல்வி முறைமைக்கு மிக முக்கியமான – இணைய வழிக்கல்விக்கு மிக அவசியமான – அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்துக் கூட ஆக்கபூர்வமான முயற்சிகள் எதனையும் அரசும் கல்வி நிர்வாகத் துறையினரும் முன்னெடுக்கவேயில்லை.

கணிசமான மாணவர்களுக்கு இணைய வழிக் கல்விக்கு மிக அத்தியாவசியமான ஸ்மார்ட் போன்கள், டப் போன்ற வசதிகள், இணைய இணைப்புகள் என்பவை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. குறைந்தபட்சம் அவ்வாறு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முன்முயற்சிகள் கூட உருப்படியாக ஆரம்பிக்கப்படவில்லை.

மாறாக, அவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவது போன்ற பம்மாத்து அறிக்கைகளும், அறிவிப்புகளும், புள்ளிவிவரங்களும் வெளியிடப்பட்டன. அவ்வளவுதான்.

தொலைதூரக் கல்வி, இணைய வழிக் கல்வி என்பவை இலங்கை மாணவர்களைப் பொறுத்தவரை இதுவரை ஏட்டுச் சுரைக்காய்தான். நம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு அவை உதவவில்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை.

இந்தப் பம்மாத்து நடவடிக்கைகளும், சுத்துமாத்து அறிக்கைகளும் இதுவரை அடங்கிக் கிடந்த கல்வித்துறையினரைச் சீற்றம் கொள்ள வைத்துள்ளன.

மேலும் கல்வித் துறையினரை – குறிப்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவையினரை – இலங்கை அரசும், கல்வி அமைச்சும், அரசியல்வாதிகளும் கையாண்ட முறைமையும் சீண்டிய விதமும் அவர்களை உசுப்பேற்றி விட்டிருக்கின்றன.

விளைவு பெரும் விபரீதமாகி உள்ளது.

கொஞ்சநஞ்சம் நடந்த இணையவழிக் கல்வி முறையும் அடியோடு நின்று மூன்று வாரங்கள் கடந்து விட்டன. அதிபர், ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டை நீக்குவது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் வீதிக்கு வந்து விட்டார்கள்.

அவர்களைச் சமாளிப்பதற்குக் கல்வி அமைச்சரும், பிரதமரும் தனித்தனியாக மேற்கொண்ட சமரச முயற்சிகள் தோற்றுவிட்டன.

இவ்விடயத்தில் நிலைமையை வழமைக்கு கொண்டுவருவதற்கு கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு திட்டம் அமைச்சரவையைத் தாண்ட முடியாமல் அங்கேயே தடைப்பட்டு விட்டது.

மாணவர்களின் கல்விப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு காண முடியாத அரசு, அதிகாரத்தில் இருப்பதை விடுத்துப் பதவி விலகிச் செல்வதுதான் நியாயமாக இருக்கும். என்ன செய்யும் உத்தேசத்தில் உள்ளது கோட்டா அரசு? மாணவர் கல்வி எக்கேடு கெட்டாலும் என்ன என்ற பொறுப்பற்ற போக்கை அது தொடரத்தான் போகின்றதா?

# பாடசாலைகள் விரைவாக திறக்கப்படுதல் வேண்டும்

## கல்வி அமைச்சர் பீரிஸ் வலியுறுத்து



முடிந்தளவு விரைவாக பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் –

தற்போதைய சூழ்நிலையில் வசதியற்ற குடும்பங்களில் உள்ள மாணவர்கள் கல்வி வாய்ப்புகளை இழந்துள்ளனர் எனக் கூறினார்.

நாட்டின் தொலைதூர பகுதிகளில், குறிப்பாக இணைய அணுகல் இல்லாத பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு இது பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

தற்போது மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ள நிலையில் அவர்கள் தயாராக இருப்பதை நாங்கள் உறுதி செய்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சூழ்நிலையில், சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, விரைவில் பாடசாலைகளைத் திறப்பதே முதன்மைகுறிக்கோள் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

இன்று (நேற்று) முதல் அனைத்து அரச ஊழியர்களும் வழக்கம் போல் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே இந்தச் சூழலில் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் பாடசாலைகளுக்குச் சென்று திறப்பதற்குத் தேவையான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது

## காமினி லொக்குகே திட்டவட்டம்



நாட்டின் தற்போதைய நிலையில் ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என அமைச்சரவை ஏகமனதாக முடிவுசெய்துள்ளதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவைகூட்டத்தைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

ஆசிரியர்களின் சம்பளக் கோரிக்கைகளை நிறைவேற்ற 5,600 கோடி ரூபா தேவை என கூறியுள்ளார்.

இருப்பினும் நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு அரசாங்கத்தால் தற்சமயம் 5,600 கோடி ரூபா நிதியை செலவழிக்க இயலாது என்றும் அவர் குறிப்பிட்டார். கடந்த அரசாங்கத்தால் ஏற்பட்ட ஆசிரியர் மற்றும் அதிபர் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்ட நிலையில் பேச்சின் முடிவுகள் தொடர்பாக தொழிற்சங்கத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

போராட்டங்களை நடத்த தொழிற்சங்கங்களுக்கு ஜனநாயக உரிமை காணப்படும் நிலையில் அதனை அரசாங்கம் தடுக்காது என்றும் காமினி லொக்குகே குறிப்பிட்டார்.

# மக்கள் தொடர்பான திட்டங்கள் இல்லாதவர்கள் எங்களை விமர்சனம் செய்ய அருகதையற்றவர்கள்

## பிரசாந்தன் சாட்டை

மக்கள் தொடர்பான எந்தத் திட்டமும் இல்லாதவர்கள் எங்களை விமர்சனம் செய்வதற்கு அருகதையற்றவர்கள் எனத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பூ.பிரசாந்தன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

சிறுமி ஹிஷாலினிக்கு ஏற்பட்ட சம்பவம் போன்று எதிர்வரும் காலங்களில் இடம்பெறாத வகையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மேலும் சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்குநீதி கோரி முன்னெடுக்கப்படுகின்ற போராட்டத்தை சிலர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர்.

மேலும் சிலர், தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து செல்லுகின்றமையால் இஸ்லாமிய மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் முனைப்பில் செயற்படுகின்றனர்.

இதேவேளை ஒரு கட்சியில் நிரந்தரமாக நின்று அரசியல் செய்ய முடியாதவர்கள், மக்கள் தொடர்பான எந்தத் திட்டமும் இல்லாதவர்கள் எங்களை விமர்சனம் செய்வதற்கு அருகதையற்றவர்கள். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஏனைய மாகாணங்களுக்கான பஸ் சேவைகள் வடக்கிலிருந்து

வடக்கு மாகாணத்தில் இருந்து ஏனைய மாகாணங்களுக்கான பஸ் சேவைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கடந்த காலங்களில் கொரோனா அச்சுறுத்தல் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வந்தமையால் மாகாணங்களுக்கு இடையில் பயணத்தடை விதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நேற்றையதினம் முதல் ஏனைய மாகாணங்களுக்கு செல்வதற்கான பயணத்தடை தளர்த்தப்பட்டதையடுத்து, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச மற்றும் தனியார் பஸ்கள் வவுனியாவில் இருந்தும், வவுனியா ஊடாகவும் பயணிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்காவில் தீவிரமடையும் உருமாறிய டெல்டா வகை கொரோனா பரவல்!



## டிரைவ் – இன் தடுப்பூசி மையங்களுக்கு மக்கள் படையெடுப்பு

அமெரிக்காவில் உருமாறிய டெல்டாவகை கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருவதை அடுத்து பல்வேறு மாநிலங்களில் மீண்டும் கட்டுப்பாடுகள் அதிகரிக்க தொடங்கியுள்ளன. தடுப்பூசி நடவடிக்கைகளை அமெரிக்க அரசு முழு வீச்சில் அமுல்படுத்தி இருந்தாலும் பல்வேறு மாநிலங்களில் தொற்று அதிகரித்து வருகிறது.

நேற்று ஒரேநாளில் மட்டும் அமெரிக்காவில் 55,899 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் புளோரிடா, டெக் சாஸ், கலிபோர்னியா ஆகிய மாநிலங்களில் தினசரி தொற்று அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக ஒருநாள் தொற்று 44 சதவீத அளவுக்கு உயர்ந்துள்ளதாக சுகாதாரத் துறையினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து தொற்றுநோய் தடுப்பு இயக்குநர் ரோச்சல் தெரிவித்ததாவது, கடந்த சனிக்கிழமை கிடைத்துள்ள ஒரு வார தரவுகளின்படி சராசரியாக நாள் ஒன்றுக்கு 72,000 பேருக்கு தொற்று பரவுகிறது. அதாவது கடந்த ஒரு வாரத்தில் மட்டும் சுமார் 44% தொற்று அதிகரித்து இருக்கும் அதிர்ச்சி தகவல் கிடைத்திருக்கிறது. கடந்த கோடை காலத்தில் இருந்ததை விட தொற்று அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டார். தினசரி தொற்று அதிகரித்து வரும் மாநிலங்களில் தடுப்பூசி நடவடிக்கைகளை ஜோ பைடன் அரசு தீவிரப்படுத்தி இருக்கிறது. கொரோனா பரவல் அதிகம் உள்ள புளோரிடாவில் பல்வேறு இடங்களில் திறந்தவெளி டிரைவ் – இன் தடுப்பூசி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

புளோரிடாவில் தொற்று வேகம் எடுத்துள்ளதால் மக்கள் தடுப்பூசி மையங்களுக்கு படையெடுத்துள்ளனர். இதனால் தடுப்பூசி மையங்களில் கார்களின் நீண்ட வரிசை காணப்படுகிறது. கலிபோர்னியா, டெக்சாஸ், நியூயோர்க், ஜார்ஜியா, வடக்கு கரோலினா உள்ளிட்ட மாநிலங்களிலும் தடுப்பூசி நடவடிக்கைகளை துரிதப்படுத்த அமெரிக்க சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.

தொற்று அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் தற்போதும் முதல் இடத்தில் உள்ள அமெரிக்கா உள்ளது. இதுவரை அங்கு 3 கோடியே 58 லட்சத்திற்கும் அதிகமானோருக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கனமழை காரணமாக

# சீனாவில் வெள்ளம் 302 பேர் உயிரிழப்பு



சீனாவில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 300ஐ தண்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சீனாவில் ஆண்டுதோறும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால்ஏற்படும்பெருவெள்ளத்தில் சிக்கி பலர் இறந்து போகின்றனர். மேலும் பொருள்களும் அதிக அளவில் சேதம் அடைகின்றன.

இந்த நிலையில், மத்திய ஹெனான் மாகாணத்தில் கடந்த இரண்டு வாரமாக பலத்த மழை பெய்து வருகிறது. வரலாறு காணாத கனமழையால் ஜெங்ஜவ், ஜிங்ஜியாங், எனியாங் மற்றும் ஹெபி ஆகிய 4 நகரங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டு உள்ளன என கூறப்படுகிறது. மேலும்,அதை தவிர பல்வேறு நகரங்களிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில், ஹெனான் மாகாணத்தில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 302ஆக உயர்ந்துள்ளது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 50 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருவதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். ஜெங்ஜோ என்ற இடத்தில் சுரங்கப் பாதையில் வெள்ளநீர் புகுந்ததில் கார் நிறுத்துமிடத்தில் 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஒரு கோடியே 30 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளன எனவும் சீன அரசு தகவல் தெரிவித்துள்ளது. வெள்ளத்தில் சிக்கிய ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள்மீட்கப்பட்டுபாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.மழை,வெள்ளத்தால் ஏற்பட்ட மொத்தப் பாதிப்பு விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

# மனிதர்களை தாக்கும் வகையில் மரபணு மாற்றி கொரோனா வைரஸை சீனா உருவாக்கியது

## அமெரிக்க அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்



சீனாவில் வுகான் ஆய்வகத்திலிருந்தே கொரோனா வைரஸ் பரவியுள்ளது. இது மனிதர்களை தாக்கும் வகையில் மரபணு மாற்றி உருவாக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் குடியரசுக் கட்சி எம்.பிக்கள் அறிக்கை கூறியுள்ளது.கடந்த2019ஆம் ஆண்டின் இறுதியில் உலகெங்கும் பரவிய கொரோனா வைரஸ் இன்றுவரை எல்லோரையும் ஆட்டிப்படைத்து வருகிறது.

இதன் தோற்றம் பற்றி மாறுபாடான தகவல்கள் நிலவி வருகின்றன. இதுகுறித்து சீனாவில் நேரடியாக ஆய்வு செய்த உலக சுகாதார நிறுவனமும் தெளிவான பதிலை தரவில்லை. அமெரிக்காவின் அதிபராக பதவியேற்ற பிறகு, ஜோ பைடன் இதுகுறித்து விசாரணை நடத்துமாறு அமெரிக்க உளவுத்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்காவின் குடியரசுக்கட்சி எம்.பிக்கள் குழு நேற்று பரபரப்பான அறிக்கையை வெளியிட்டது. அதில், “சீனாவிலுள்ள விலங் குகளின் சந்தையினால் கொரோனா பரவியது என்ற தகவலை முற்றிலும் மறுப்பதற்கான நேரம் இது. விலங்குகளினால் கொரோனா நிச்சயம் பரவவில்லை. வுஹான் வைரஸ் ஆராய்ச்சி நிலையத்திலிருந்தே கொரோனா வைரஸ் வெளியாகியுள்ளது. இதற்கு போதுமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மனிதர்களை பாதிக்கும் வகையில் கொரோனா வைரஸ் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது 2019ஆம் ஆண்டின் செப்டெம்பர் 12ஆம் திகதிக்கு முன்பு பரப்பப்பட்டிருக்கலாம்” என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் பல்வேறு உளவுத்தகவல்களின் அடிப்படை யில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை என கூறப்படுகிறது. ஆனால்அமெரிக்கஉளவுத்துறையின் அதிகாரப் பூர்வ அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. குடியரசுக் கட்சியின் அறிக்கையை அமெரிக்காவின் உளவுத்துறை உறுதிப் படுத்தும் பட்சத்திலேயே இதன் அடுத்தகட்டம் என்னவென்பது தெரிய வரும். மரபணு மாற்றியமைக்கப்பட்ட, மனிதர்களால் உருவான வைரஸாக கொரோனா இருக்கும்பட்சத்தில் இதுகுறித்து சர்வதேச விசாரணையை சீனா எதிர்கொள்ள நேரிடும். பொருளாதாரத்தடை உள்ளிட்ட பல சங்கடங்களையும் சீனா சந்திக்கும்.

# சீனாவில் மீண்டும் தீவிரமடையும் கொரோனாத் தொற்று

## டெல்டா வைரஸ் பரவலை அடுத்து மீண்டும் ஊரடங்கு அமுல்



உருமாறிய கொரோனா டெல்டா வைரஸ் பரவலை அடுத்து சீனாவில் மீண்டும் ஊரடங்கு அமல் படுத்தப்பட்டுள்ளது. சீனாவின் வுகான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு டிசெம்பரில் முதன் முதலாக வெளிப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று உலக நாடுகளை உலுக்கி வருகிறது. தொற்று பாதிப்பு ஏற்பட்டு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கடந்து விட்டாலும் கூட தொற்றின் வீரியம் குறைந்தபாடில்லை. கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து பல அலைகளாக தாக்கத்தொடங்கியுள்ளது. இதனால், உலக நாடுகள் விழி பிதுங்கி நிற்கின்றன. தற்போதைக்கு தடுப்பூசியால் மட்டுமே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறிவருவதால், தடுப்பூசி போடும் பணியும் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. சீனாவில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறி வரும் வரும் நிலையில் 20 நகரங்களில் டெல்டா வைரஸ் தாக்குதல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வைரஸ் தாக்குதல் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதால் பரிசோதனை நடத்த சீனா முடிவு செய்துள்ளது. 12 மாகாணங்களில் டெல்டா வைரஸ் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வுகான் மாகாணத்தின் ஜ்ஜென் நகரில் 3 நாள்களுக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு பரிசோதனை நடைபெறுகிறது. சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு ஏற்கனவே சீனத் தலைநகரான பெய்ஜிங் நிர்வாகம் தடை விதித்துள்ளது.

# இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது துப்பாக்கிச் சூடு தொடர்பாக அன்புமணி ராமதாஸ் அறிக்கை



தமிழக மீனவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய இலங்கைக் கடற்படையினரை உடனே கைது செய்ய இந்திய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து பா.ம.க. இளைஞரணிச் செயலாளர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், வங்கக் கடலில் கோடியக்கரைக்கு அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். சிங்களப் படையினரின் இத்தாக்குதலில் தமிழக மீனவர் ஒருவர் படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்இலங்கைக் கடற்படையினரின் இந்த அத்துமீறல் கடுமையாகக் கண்டிக்கத்தக்கது.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டையைச்சேர்ந்த மீனவர்கள், கடந்த 28 ஆம் திகதி வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். கோடியக்கரையிலிருந்து தென் கிழக்கில் 5 கடல் மைல் தொலைவில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த சிங்களக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

இலங்கைப் படையினரின் தாக்குதலில் இருந்து தப்ப தமிழக மீனவர்கள் படகுகளுக்குள் பதுங்கிக் கொண்டனர். கௌதமன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகின் மீது சிங்களப் படையினர் நடத்திய தாக்குதலில், அதில் பதுங்கி இருந்த கலைச்செல்வன் என்ற மீனவரின் தலையை உரசிக்கொண்டு, துப்பாக்கி குண்டுசென்றது. இந்தத் தாக்குதலில் கலைச்செல்வன் படுகாயமடைந்து நாகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் மீது இலங்கைப் படையினர் தாக்குதல் நடத்துவதும், துப்பாக்கிச் சூடு நடத்துவதும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. கடந்த இரு மாதங்களில் மட்டும் 7 முறை தமிழக மீனவர்கள் மீது சிங்களப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இத்தகைய தாக்குதல்களில் மீன்பிடி வலைகள் கிழிக்கப்பட்டதாலும், படகுகள் சேதப்படுத்தப்பட்டதாலும் தமிழக மீனவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் மட்டும் பல லட்சமிருக்கும். ஆனாலும், சிங் களப் படையினரின் அத்துமீறல்களுக்கு இந்திய மத்திய, மாநில அரசுகள் கண்டனம் தெரிவிக்காததுதான், தமிழக மீனவர்கள் மீது இதுபோன்ற தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தும் துணிச்சலை சிங்களைப் படையினருக்கு அளித்துள்ளது.

இந்தியா - இலங்கை இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி தமிழக மீனவர்களைத் தாக்குவதும், துப்பாக்கிச் சூடு நடத்துவதும் குற்றமாகும். இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழையும் இலங்கை மீனவர்கள் எவரையும் இந்தியக் கடலோரக் காவல் படை தாக்குவதில்லை. மாறாக, அவர்களைக் கைது செய்து கண்ணியமாக நடத்துகிறது. மாறாக, தமிழக மீனவர்களை இலங்கைப் படைகள் தாக்குவதும் துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்துவதும் இந்தியாவைச் சீண்டும் செயலாகும். இந்தியாவின் இறையாண்மைக்கு ஊறு விளைவிக்கக்கூடிய செயல்களை மத்திய அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது.

தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படையினர் தாக்கியதற்காக இந்தியாவுக்கான இலங்கைத் தூதரை இந்திய வெளியுறவுத்துறை அழைத்துக் கண்டனம் தெரிவிக்க வேண்டும். கேரளத்தின் அரபிக் கடல் பகுதியில் தமிழக மீனவர்கள்இருவரைச்சுட்டுக்கொன்றதற்காக இத்தாலியக் கடற்படையினரைக் கைது செய்ததைப் போன்று, இந்த விடயத்திலும் தமிழக மீனவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சிங்களக் கடற்படையினரை உடனே கைது செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.







## தமிழக சட்டப்பேரவையில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உருவப்படம் குடியரசுத்தலைவரால் திரைநீக்கம் செய்யப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவையொட்டி, முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் உருவப் படத்தை இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத்கோவிந்த் சட்டப்பேரவையில் நேற்று திறந்து வைத்தார்.

தமிழக சட்டப்பேரவையில் 16 ஆவது தலைவராக மு.கருணாநிதியின் படம் இடம்பெறுகிறது. முதலமைச்சர் மற்றும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் இருக்கைக்கு நேர் எதிராக முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் திருவுருவப்படம் பொருத்தப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டுள்ளது. படத்திற்கு கீழாக, காலம் பொன் போன்றது. கடமை கண் போன்றது என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது.

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவை சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள், உயரதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த விழாவில் பங்கேற்றனர். இந்த விழாவை அ.தி.மு.க. புறக்கணித்த நிலையில், பா.ஜ.க. சார்பில் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை விழாவில் கலந்து கொண்டார். கீ.வீரமணி, வைகோ, திருமாவளவன், கே.எஸ்.அழகிரி, கே.பாலகிருஷ்ணன், முத்தரசன், ஜி.கே.வாசன் ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர் மு.கருணாநிதியின் படத்தை திரைநீக்கம் செய்துவைத்ததில் மகிழ்கிறேன். உண்மையில் இது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாள் என இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தமிழில் உரையாற்றியிருந்தார். தொடர்ந்து பேசிய அவர், தமிழக சட்டமன்ற விழாவில் பங்கேற்பதில் பெருமிதம் கொள்கிறேன். ஜனநாயக அடிப்படையிலான நிர்வாகத்தை உறுதிசெய்வதில் சட்டமன்றம் மிகவும் சிறப்பான அமைப்பாக உள்ளது. தனது புரட்சிகரமான எண்ணங்களால்சமூகசீர்திருத்தங்களுக்கு வித்திட்டவர் கருணாநிதி என புகழாரம் சூட்டினார்.

## மூன்றாவது போக்சோ வழக்கில் சிவசங்கர் பாபாவுக்கு 16 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவல்



தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டம் கேளம் பாக்கத்தையடுத்த புதுப்பாக்கத்தில் இயங்கி வந்த சுசில் ஹரி சர்வதேசப் பாடசாலையின் நிறுவனர் சிவசங்கர் பாபா மீது பாலியல் புகார் வந்த நிலையில், புகாரை விசாரித்த சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் அவர் மீது ஏற்கனவே இரண்டு போக்சோ வழக்குகள் பதிவு செய்து செங்கல்பட்டு நீதிமன்றத்தில்ஆஜர்படுத்திசிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில் மேலும் ஒரு போக்சோ வழக்கில் சிவசங்கரை சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் செங்கல்பட்டு போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தினர்.

இதையடுத்து வரும் 16 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் அவரை வைக்க செங்கல்பட்டு போக்சோ சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அவரை 16 ஆம் திகதி மீண்டும் செங்கல்பட்டு போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் படியும் நீதிபதி தமிழரசி உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து சிவசங்கர் மீண்டும் புழல் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.





## இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விமானச் சேவைகள் தொடர்ந்தும் நிறுத்தம்

இந்தியா உள்ளிட்ட நாடுகளில் கொரோனா பரவல் அதிகரித்ததால் கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதியிலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கான விமானச் சேவைகள் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டிருந்தன. தொடர்ந்து வருகிற 7 ஆம் திகதி வரை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு விமானப் போக்குவரத்துச் சேவை ரத்துச் செய்யப்படுவதாக எடிகாட் நிறுவனம் தெரிவித்தது. எனினும் ஒரு சில நாடுகளில் கொரோனா பரவல் தொடர்ந்து அதிகரித்து வருவதால் இந்த விமான சேவைத் தடையானது 7 ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிக்க வாய்ப்புள்ளது என்று அண்மைய தகவல்கள் கூறுகின்றன. இந்த நாடுகளில் உள்ள கொரோனாப் பாதிப்புச் சூழ்நிலை குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், சூழ்நிலையைப் பொறுத்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் எடிகாட் நிறுவனம் அறிவித்துள்ளது. இதேபோல் எமிரேட்ஸ் விமான நிறுவனமும் வருகிற 7 ஆம் திகதி வரை இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அமீரகத்துக்கான விமான சேவையை ரத்துச் செய்துள்ளது. இந்த விமான சேவை நிறுத்தத்தை தொடர்ந்து நீடிப்பது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. எனினும் தூதரக அதிகாரிகள், கோல்டன் விசா பெற்றவர்கள், முதலீட்டு விசா வைத்திருப்பவர்கள், எக்ஸ்போ 2020 கண்காட்சிக்கு செல்பவர்கள், அமீரகத்தைச் சேர்ந்தவர்கள், அரசுத் தூதுக் குழுவினர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்க்கு வருவதற்கு எந்தவிதமான தடையுமில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாங்கள் இறக்கும் தறுவாயிலும் எங்கள் பிள்ளைகளைத் தேடும் போராட்டம் தொடரும்

## அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று சங்கத்தின் அம்பாறை மாவட்டத் தலைவி த.செல்வராணி தலைமையில் திருக்கோவிலில் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் உறுப்பினர்கள், பெற்றோர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் எனப் பலரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டிருந்தனர்.



இதன்போது, தாயின் கண்ணீர்ப் பயணத்திற்கு முடிவு கொடு, பத்து மாதம் சுமந்த வயிறு பற்றி எரிகின்றதே, எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் பிள்ளைகள் எமக்கு வேண்டும், என் விழிகள் மூடமுன் என் பிள்ளைகளைக் காண வேண்டும் போன்ற பதாதைகளை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் மன வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் எமது தேடலுக்கு ஒரு முடிவு வரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் இன்னும் வரவில்லை. எனவே எங்கள் வேதனைகளை சர்வதேச நாடுகள் கண்கொண்டு பார்த்து எங்களின் பிள்ளைகளை கண்டு பிடித்துத் தருமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். எங்களால் போராட முடியாத நிலைமையிலும் நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம் நாங்கள் இறக்கும் தறுவாயிலும் எமது பிள்ளைகளைத் தேடும் போராட்டம் தொடரும்.

எங்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு பதினொரு வருடங்களாகின்றன ஆனால் இதுவரை இதற்கான தீர்வு கிடைக்கவில்லை. இனிவரும் சமுதாயத்திற்கு இவ்வாறான நிலைமை வந்துவிடக் கூடாது என்றும் தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பில் சங்கத்தின் தலைவி திருமதி த.செல்வராணி கருத்துத் தெரிவிக்கையில்,

எமது போராட்டம் பத்து வருடத்தைக் கடந்து பதினொராவது வருடத்தை எட்டி நிற்கும் இத்தறுவாயில் எட்டு மாவட்டங்களிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை இழந்து நிற்கின்றோம். எமது உறவுகளுக்கு என்ன நடந்திருக்கின்றது என்ற உண்மையையே நாங்கள் உலக நாடுகளிடம் கேட்டு நிற்கின்றோம்.

எமது பிள்ளைகள் அனைவரும் வலுக்கட்டாயமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், ஒப்படைக்கப்பட்டவர்கள், வாகனங்களில் இறக்கி எடுக்கப்பட்டவர்கள், வீடு வீடாய் சுற்றி வளைப்பில் பிடித்துச் செல்லப்பட்டவர்கள். இவர்கள் எங்களுக்கு மீள வேண்டும். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை எங்களுக்குத் தெரிய வேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்திற்கு எங்கள் பிரச்சினைகள் கொண்டு செல்லப்பட வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் எங்கள் வேதனைகளைக் கண்கொண்டு பாருங்கள். எங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நீதி வேண்டி நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். அனைத்துலக நாடுகளும் எங்களுடன் சேருங்கள்.

நாங்கள் இன்று எங்கள் பிள்ளைகள், கணவர், உறவுகளைத் தேடி நிற்கின்றோம். இந்த அவலம் யாருக்கும் வந்துவிடக் கூடாது. அனைவரும் எமது போராட்டங்களுக்கு வலுச் சேருங்கள். சர்வதேசமும், அனைத்துலக நாடுகளும் எங்கள் போராட்டத்திற்குத் தோள் கொடுத்து எங்கள் உறவுகளுக்கு நல்லதொரு தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என்று தெரிவித்தார்.



## வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபோர்ம்

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரி.எஸ்.சஞ்ஜீவ் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

இந்த வகையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவிலுள்ள 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கொவிட் 19 தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை திங்கட்கிழமை இடம்பெற்றது.

கொவிட் 19 தடுப்பூசி ஏற்றலில் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு சினோபோர்ம் தடுப்பு ஊசிகள் கிடைக்கப்பெற்ற நிலையில் பதினான்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரனின் வழிகாட்டலில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் தொடரும் நில அபகரிப்புக்கள்

கடந்த சில வருடங்களாக மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரை காணி தொடர்பாக பல பிரச்சினைகள் இடம்பெற்றிருந்த நிலையில் இன்றும் கூட அதிக நிலங்களை அபகரிக்கும் செயற்பாட்டில் பெரும்பான்மை இனத்தவர் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக அடையாளப்படுத்தப்பட்ட குறித்த காணிகளை விவசாயம் செய்வதற்காக பெரும்பான்மை இனத்தவர்களுக்கு ஆளுநரால் தமிழர்களின் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரை காணி தொடர்பாக கடந்த காலங்களில் பல கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி சுகாஸ் ஆகியோர் தலைமையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற தடையுத்தரவை பெற்றிருக்கின்ற போதிலும் இன்றைய தினமும் அதிகளவான காணிகள் கபளீகரம் செய்யும் நடவடிக்கையில் பெரும்பான்மை இனத்தவர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாக தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை குடியமர்த்துவதற்கு ஆளுநரின் தலைமையில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னதாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இது பேசுபொருளாக காணப்பட்டிருந்தபோதிலும் அத்துமீறிய குடியேற்றங்கள் இன்று வரை தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

கடந்த காலங்களிலும் மேய்ச்சல்த்தரை காணி தொடர்பாக உண்மையான தகவல்களை வெளிக்கொணர்ந்த ஊடகவியலாளர்களும் அச்சுறுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் திட்டமிட்ட நில அபகரிப்பு இடம்பெற்று வருவதாக பண்ணையாளர்கள் தங்களது கவலையை வெளியிட்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக இதற்கான தீர்வை பெற்றுத் தர வேண்டும் என்று பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருது சுகாதாரப் பகுதியில் கொரோனா மரணம் 8 ஆக உயர்வு

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதன்படி சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ள அதேவேளை கல்முனைப் பிராந்தியத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்துள்ளது.

சிலதினங்களுக்கு முன்னர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சாய்ந்தமருது -17, தண்டையல் வீதியைச் சேர்ந்த 54 வயதுடைய ஆண் ஒருவரே நேற்று உயிரிழந்துள்ளார் என பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் இதுவரை 133 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் தற்போது 11 பேர் கொரோனா சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 48 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை 1,014 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் 1,120 பேருக்கு ரெபிட் அன்டிஜன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம். நிஸ்தார் மேலும் தெரிவித்தார்.



காலைக்கதிர் மாலைப்பதிப்பு





# ஒலிம்பிக் பதக்கப்பட்டியலில் சீனா முதலிடம்

உலகின் முக்கிய விளையாட்டு நிகழ்வுகளில் ஒன்றான ஒலிம்பிக், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்று வருகின்றது. பதக்கப்பட்டியலில் ஆரம்பித்த முதல் நாளில் சீனா முதல் இடத்தில் இருந்தது. பின்னர் அமெரிக்கா, ஜப்பான் முதலிடம் பிடித்தன. 12 ஆவது நாளான இன்று காலை நிலைவரப்படி சீனா மீண்டும் முதலிடத்தில் உள்ளது.

சீனா 29 தங்கப்பதக்கம், 18 வெள்ளி, 16 வெண்கலத்துடன் 63 பதக்கங்களைப் பெற்று முதலிடத்திலும், அமெரிக்கா 22 தங்கம், 27 வெள்ளி, 17 வெண்கலம் மொத்தமாக 66 பதக்கங்களைப் பெற்று இரண்டாவது இடத்திலும், ஜப்பான் 18 தங்கம் 6 வெள்ளி, 10 வெண்கலம் ஆகியவற்றுடன் 34 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திலுமுள்ளன.

14 தங்கம், 4 வெள்ளி, 15 வெண்கலம் ஆகியவற்றுடன் மொத்தம் 33 பதக்கங்களுடன் ஆஸ்திரேலியா 4 ஆவது இடம் வகிக்கிறது. ரஷ்ய ஒலிம்பிக் குழு 12 தங்கம், 21 வெள்ளி, 17 வெண்கலத்துடன் மொத்தம் 50 பதக்கங்களுடன் 5 ஆம் இடத்தில் உள்ளது.

பிரித்தானியா 11 தங்கம், 12 வெள்ளி, 12 வெண்கலம் 35 பதக்கங்களுடன் ஆறாமிடத்திலும், ஜேர்மனி மொத்தமாக 26 பதக்கங்களைப் பெற்று 7 ஆம் இடத்திலும் உள்ளன.

# தலையில் ஏற்பட்ட பாதிப்பினால் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் மயங்க் அகர்வால் விளையாடமாட்டார்

விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்து அணிக்கு எதிராக 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மயங்க் அகர்வால் வலைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது பந்து அவரது ஹெல்மெட்டை தாக்கி, தலையில் பாதிப்பு ஏற்பட்ட காரணத்தினால் முதல் போட்டியில் விளையாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் அடிப்படையில் ஓய்வு அளிப்பதற்கு மருத்துவர்கள் பரிந்துரைத்திருந்தனர் என இந்திய கிரிக்கெட் அணி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஏற்கெனவே ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சுப்மன் கில் இங்கிலாந்துத் தொடரிலிருந்து காயம் காரணமாக விலகிய நிலையில், தற்போது மயங்க் அகர்வாலுக்கு ஏற்பட்டுள்ள காயம் அணியில் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்துத் தொடரில் விளையாட அழைக்கப்பட்ட மாற்று வீரர்களான பிருத்வி ஷாவும் சூர்யகுமார் யாதவும் அவர்களது தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து மூன்றாவது டெஸ்ட் போட்டியிலிருந்தே விளையாட முடியுமென்பதால் கே.எல். ராகுல், அபிமன்யு ஈஸ்வரன் ஆகிய இருவரில் ஒருவரை ரோகித் சர்மாவுடன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறக்கலாம் என இந்திய கிரிக்கெட் அணி நிர்வாகம் ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



# பங்களாதேஷ் அணியுடனான தொடரை பிற்போட்டது இங்கிலாந்து

செப்டெம்பர் - ஒக்டோபர் காலப் பகுதியில் பங்களாதேஷ் அணியுடன் விளையாடவிருந்த ஒருநாள், ரி-20 போட்டித் தொடர்களை திகதி குறிப்பிடாது ஒத்திவைப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

வரும் ஒக்டோபர் 17ஆம் திகதி உலகக் கிண்ண ரி-20 தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறவிருக்கும் நிலையில் அதற்கான இங்கிலாந்தின் முன்னாயத்தப் போட்டிகளாக பங்களாதேஷ் அணியுடனான போட்டிகள் இருக்குமென்று கருதப்பட்ட நிலையில் அவை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொடர்கள் ஒத்திவைக்கப்பட்டமைக்கான தெளிவான காரணங்கள் எதனையும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவிக்காவிட்டாலும், தற்போதைய கொரோனா பாதிப்பு நிலைமையில் அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுப்பாடுகள் அணி வீரர்களுக்கு அழுத்தங்களை அதிகரிக்குமென்பதாலேயே குறித்த தொடர்கள் பிற்போடப்பட்டிருக்கலாமென்று கருதப்படுகிறது.

ஏற்கனவே தொடர்ச்சியாக இங்கிலாந்து அணி பல தொடர்களில் விளையாடிவருகிறது. நாளையதினம் இந்திய அணிக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் ஆரம்பிக்கிறது. எனவே, வீரர்களுக்கு வேலைப்பளுவும் அதிகமிருக்கப் போகும் நிலையில் அடுத்தடுத்து தொடர்களில் விளையாடவைப்பது அவர்களது உடல், உள நலன்களைப் பாதிக்கலாமென இங்கிலாந்து கிரிக்கெட் சபை கருதுவதாக உள்ளகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷ் தொடர் ஒத்திவைக்கப்பட்டதால், செப்டெம்பர் 19 ஆம் திகதி எமிரேட்ஸில் மீள ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல். தொடரின் மீதிப் போட்டிகளில் விளையாடுவதற்கு இங்கிலாந்து வீரர்கள் விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கு கிரிக்கெட் சபை அனுமதி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## ஆண்கள் 400மீ தடைதாண்டுதல் ஓட்டம்

# மிகப்பெரிய உலக சாதனையுடன் நோர்வே வீரர் தங்கம் வென்றார்



டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான 400மீ தடைதாண்டுதல் ஓட்டத்தின் இறுதிச் சுற்று இன்று நடைபெற்றது. இதில் 8 வீரர்கள் கலந்து கொண்டனர். இதில் நோர்வே வீரர் கார்ஸ்டன் வார்ஹோல்ம் பந்தய தூரத்தை 45.94 வினாடிகளில் கடந்து தங்கப்பதக்கம் வென்றார்.

அத்துடன் உலக சாதனையையும் படைத்தார். இதற்கு முன் கடந்த மாதம் இவர்தான் 46.70 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து உலக சாதனைப் படைத்திருந்தார்.

தற்போது அவரது சாதனையை அவரே முறியடித்துள்ளார்.

# கொத்தலாவல சட்டத்துக்கு எதிர்ப்பு மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்




இலவசக் கல்வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்ட மூலத்தை உடனடியாக ரத்து செய்யக் கோரி மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்ட மொன்று நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் வலயக்கல்வி பணிமனைக்கு முன்பாக குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், இலவசக் கல்வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்ட மூலத்தை உடனடியாக ரத்து செய்யுமாறும் 24 வருட ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு உடனடித் தீர்வை வழங்குமாறும் வலியுறுத்தினர்.

மன்னார் வலயக்கல்வி பணிமனைக்கு முன்பாக ஆரம்பமாகிய ஆர்ப்பாட்டப் பேரணி, மன்னார் பஜார் வீதியூடாக சென்று மன்னார் மாவட்ட செயலக வீதியை சென்றடைந்தது. அங்கிருந்து மீண்டும் மன்னார் வலயக்கல்வி பணிமனை வீதியை சென்றடைந்தமை குறிப்பிடத் தக்கது.

## பெரும்பான்மை சமூகத்தின் ஆதிக்கத்தை முல்லைத்தீவில் நிலைநாட்ட அரசு முயற்சி

### ரவிகரன் காட்டம்



முல்லைத்தீவு- வட்டுவாகல் பகுதியும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளும் அரசாங்கத்தின் சில திணைக்களங்களாலும் படையினராலும் அபகரிக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக துரைராசா ரவிகரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

வட்டுவாகலை அண்மித்த பகுதிகளில் 617 ஏக்கர் காணிகள் கடற்படை வசமும் 400 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் இராணுவத்தின் வசமும் உள்ளன. மேலும் பெரிய விகாரை ஒன்றையும் அப்பகுதியில் அமைத்து, பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தை நிலை நாட்டி வருகின்றனர்.

இதேவேளை கடந்த 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வட்டுவாகல் நந்திக் கடல் மற்றும் நந்திக் கடல் சேர்ந்த பகுதிகளில் உள்ள சுமார் 10 ஆயிரத்து 230 ஏக்கர் நிலப்பரப்பை வன ஜீவராசிகள் திணைக்களம், தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

மேலும் முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் அமைந்துள்ள காணிகள், முள்ளிவாய்க்கால் கிழக்கு மக்களுக்கும் வட்டுவாகல் மக்களுக்கும் உரியவையாகும்.

இந்நிலையில் கடந்த 29 ஆம் திகதி, வட்டுவாகல் பகுதியில் கடற்படையினருக்கான காணி அளவீட்டுக்காக, நில அளவைத் திணைக்களத்தினர் சென்றவேளை அவர்களை வழி மறித்த மக்கள், எதிர்ப்பைத் தெரிவித்து போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர். – என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 10 சிறைக்கைதிகள் உட்பட 41 பேருக்கு வவுனியாவில் கொரோனாத் தொற்று உறுதி

வவுனியாவில் 10 சிறைக் கைதிகள் உட்பட 41 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகியிருந்தன.

அதில், நேரியகுளம் பகுதியில் 15 பேருக்கும், சலனிகம பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், விநாயகபுரம் பகுதியில் ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம் பகுதியில் 3 பேருக்கும், புதுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், சாம்பல் தோட்டம் பகுதியில் ஒருவருக்கும், பாரதிபுரம் பகுதியில் ஒருவருக்கும், மெனிக்பாம் பகுதியில் ஒருவருக்கும், புதிய கற்பகபுரம் பகுதியில் ஒருவருக்கும், மருதமடு பகுதியில் ஒருவருக்கும், மாங்குளம் பகுதியில் ஒருவருக்கும், முதலியார்குளம் பகுதியில் ஒருவருக்கும், வைத்தியசாலை விடுதியில் ஒருவருக்கும், உடையார்கட்டு தெற்கு பகுதியில் இருவருக்கும், பட்டக்காடு பகுதியில் 3 பேருக்கும், சிறைச்சாலை கைதி ஒருவருக்கும், இராசேந்திரங்குளம் ஒருவருக்கும், ஓமேக்கா ஆடைத் தொழிற்சாலையில் இருவருக்கும், மாகா நிறுவனத்தைச் சேர்ந்த இருவருக்கும் என 41 பேருக்குக் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 10பேர்வவுனியாசிறைச்சாலைக் கைதிகளாக உள்ளனர். அத்துடன் தமக்கான நோய் அறிகுறிகள் தென்பட்ட நிலையில் தாமாக முன்வந்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டவர்களில் 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றுக்கு இலக்கானவர்களை கொவிட் சிகிச்சைநிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தவும் சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் நேற்று தடுப்பூசி போட்டார்கள்

இலங்கையில் நேற்று 4 லட்சத்து 22 ஆயிரத்து 472 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

22 ஆயிரத்து 981 பேருக்கு அஸ்ட்ராசெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டதாகவும், ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 985 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2 லட்சத்து 3 ஆயிரத்து 515 பேருக்கு முதல் சினோபோர்ம் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டதுடன் 18 ஆயிரத்து 483 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டன.

இதற்கிடையில், 12 பேருக்கு பைஸர் பயோ என்டெக் தடுப்பூசியின் முதல் டோஸும் ஆறு பேருக்கு இரண்டாவது டோஸும் வழங்கப்பட்டன.

மேலும் 2 ஆயிரத்து 490 பேருக்கு முதல் மொடர்னா தடுப்பூசி டோஸ் வழங்கப்பட்டது என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் தடுப்பூசி நடவடிக்கை தொடங்கியதில் இருந்து இதுவரை 24 லட்சத்து 48 ஆயிரத்து 361 பேர் முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர் எனத் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.



## இலக்கை அடையும் பாதையை நோக்கி தடுப்பூசி ஏற்றலில் இலங்கை பயணிக்கிறது

### உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு




கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகளில் இலக்கை அடைவதற்கான பாதையில் இலங்கை பயணிக்கிறது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் இலங்கை தடுப்பூசி செலுத்தும் இலக்கை அடையும் நிலையில் உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியெசஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாகத் தாம் மகிழ்ச்சி அடைகிறேன் எனவும் இதற்காக அரசாங்கத்துக்கும் நாட்டு மக்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில் – செப்டெம்பர் இலக்குக்கு முன்னதாக, இலங்கை தனது மக்கள்தொகையில் 10 வீதம் பேருக்கு முழுமையாகத் தடுப்பூசி போடுவதை கண்டு மகிழ்ச்சி. அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் அவர்களின் முயற்சிகளுக்கு நன்றி. வைரஸை கட்டுப்படுத்துவதற்கான நிரூபிக்கப்பட்ட பொது சுகாதாரம் மற்றும் சமூக நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். – என்று அவர் பதிவிட்டுள்ளார். இதேவேளை, ஒரே நாளில் 5 லட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்திய இலங்கையின் சாதனையை உலக சுகாதார ஸ்தாபனம் கடந்த வாரம் பாராட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.08.2021இல் வெளியிடப்பெற்றது.